**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,**
**ஜெயங்கொண்டம்.**
**C.C.No. 132/2025**

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–01, திருமதி.நிலவழகி என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4 ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.நிலவழகி | வயது | : | 30/26 |
| க.பெ. | : | பாலகுரு (எ) குமரகுரு | தொழில் | : | இல்லத்தரசி |
| ஊர் | : | கீழசிந்தாமணி | நிலை | : | LW01 / PW01 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**( எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் கீழசிந்தாமணியில் வசித்து, இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் என் உறவினர்கள், பக்கத்து வீட்டில் வசிக்கிறார்கள். எங்கள் வீட்டிற்கும் எதிரிகளின் வீட்டிற்கும் இடையில் எதிரிகளின் வீட்டு மரம் ஒன்று உள்ளது. அந்த மரத்தின் கிளைகள் எங்கள் வீட்டு ஓட்டின் மீது விழுந்து வீடு சேதமடைந்ததால், அந்த மரத்தை நாங்கள் வெட்டச் சொன்னோம். மேற்படி சம்பவத்தால் எங்களுக்குள் பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 20.12.2024 ம் தேதியன்று இரவு சுமார் 09.00 –09.30 மணியளவில், என் மாமனார் பாஸ்கர் எங்கள் வீட்டில் போன்

பார்த்துக்கொண்டிருந்தபோது, எதிரி ஆனந்த் எங்கள் வீட்டிற்குள் கையில் கட்டையுடன் வந்து, நான் மரத்தை வெட்டும் பிரச்சனையை நீ ஊரெல்லாம் சொல்லிக்கிட்டு திரியுரியா என்று சொல்லிக்கொண்டு என் மாமனாரை தகாத வார்த்தையால் திட்டி, கட்டையால் அடிக்கச் சென்றார். என் மாமியார் அதை தடுக்கச் சென்றபோது, 1வது எதிரி செந்தில்குமார் என் மாமியாரை மூங்கில் கழியால் நெற்றியில் அடித்து, இரத்தக் காயத்தை ஏற்படுத்தினார். 2வது எதிரி ஆனந்த் என் மாமியாரை கட்டையால் முதுகிலும் இடது கை முட்டியிலும் அடித்து இரத்தக் காயத்தை ஏற்படுத்தினார். நான் தடுக்கச் சென்றபோது, ஆனந்த் கட்டையால் எனது நெற்றி புருவத்திலும், மூக்கிலும் தாக்கினார். அதில் எனக்கு மூக்கின் எலும்பு உடைந்துவிட்டது. அதனால் என்னால் தற்போதுவரை ஒருபக்க மூக்கு துவாரம் வழியாக சுவாசிப்பதற்கு சிரமமாக உள்ளது. புருவத்தில் இரத்தக் காயம் ஏற்பட்டது. ( **சாட்சி தனது முகத்தில் உள்ள காயத்தழும்பை காட்டினார். வலது கண் புருவத்திலிருந்து இரு புருவத்திற்கும் இடையேயுள்ள மூக்கு வரை காயத்தழும்பு 2 இன்ச் அளவில் காணப்பட்டது).** சத்தம் கேட்டு தடுக்க வந்த என் கணவரையும் ஆஜர் எதிரிகள் அடித்துவிட்டனர். அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் தடுக்க வந்தபோது,2 வது எதிரி ஆனந்த் கட்டையை காட்டி என்னைக்காக இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார். நாங்கள் பழூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம்.அவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் எங்களை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்னர் நாங்கள் அங்கு சிகிச்சையிலிருந்தபோது, பழூர் போலீசார் என்னை விசாரித்து, புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் 12ம் வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுதப் படிக்க தெரியும். எனது குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் பூர்வீக சொத்தினை பொறுத்து பதிவுசெய்யப்பட்ட பாக அட்டவணைப்படி பாகம் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எங்களுக்குள் சொத்து பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. எங்களுக்குள் மரம் வெட்டுவது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான்.

2) நான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியன்று நேரடியாக தா.பழூர் காவல் நிலையம்தான் சென்றேன் என்றால் சரிதான். நான் புகார் எழுதி கையில் எடுத்துச்சென்றேன் என்றால் இல்லை. நாங்கள் காவல் நிலையத்திற்கு எதில் சென்றேன் என்றால் என் கணவர் இருசக்கர வாகனத்தில் அழைத்துச் சென்றார். போலீசார் எங்களை விசாரிக்காமல் மருத்துவமனைக்குத்தான் போகச் சொன்னார்கள் என்றால் சரியல்ல, என்ன நடந்தது என்று கேட்டார்கள், நான் சம்பவத்தை சொன்னேன். எனக்கு இரத்தம் அதிகமாக வந்ததால் என்னை உடனடியாக மருத்துவமனைக்கு போகச் சொன்னார்கள். அங்கு வந்து என்னை விசாரிப்பதாக கூறினார்கள்.

3) அருகிலுள்ள பழூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நானும் என் கணவரும் சென்றோம். என் மாமியார் என்னுடன் வரவில்லை என்றால் சரிதான். அவர்கள் எங்களுக்கு பின்னால் வந்தார். என் மாமியார் எப்படி மருத்துவமனைக்கு வந்தார் என்றால் நடந்து வந்தார். என்

மாமியார் நேரடியாக காவல் நிலையம் வந்தாரா என்றால் நாங்கள் அவரை நேரடியாக மருத்துவமனைக்கு போன் செய்து, வரச்சொல்லிவிட்டோம். என் மாமியார் நான் போனில்சொன்னதுபடி நேரடியாக காவல் நிலையம் சென்றுவிட்டு மருத்துவமனைக்கு வந்தாரா? அல்லது மருத்துவமனைக்கு நேரடியாக வந்தாரா என்றால் நானும் என் கணவரும் மட்டும்தான் காவல் நிலையம் சென்றோம்.

4) எதிரிகள் என்னை அடிக்க பயன்படுத்திய கட்டை கழி மற்றும் மூங்கில் கழியின் நீளம், அகலம் தெரியுமா என்றால் தெரியவில்லை. ஆனால், பெரிதாக இருந்தது. மூங்கில் கழி 6, 7 அடிக்கு குறையாமல் பச்சை கழியாக இருந்தது. கட்டை கழியும் 6,7 அடிக்கு குறையாமல் நீளம் கொண்டது, அது காய்ந்த கழி ஆகும். அந்த கழிகளை போலீசாரிடம் நாங்கள் ஒப்படைக்கவில்லை. போலீசாரும் அதனை கைப்பற்றினார்களா என்று எனக்கு தெரியாது.

5) ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையிலிருந்து அன்றைய தினம் இரவே என்னை அரியலூர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்களா என்றால் அன்றைய தினம் இரவே அனுப்பி வைத்தார்கள். விடியற்காலையில் அரியலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கிருந்து தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி என்றைய தினம் மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் 3 நாட்களுக்கு பிறகு சென்றேன். நேரம் நினைவில்லை.

6) போலீசார் என்னை எந்த மருத்துவமனையில் வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் வைத்து, சம்பவ தினமான 20.12.2024ம் தேதி இரவே விசாரித்தார்கள். ஆனால், நேரம் நினைவில்லை. ஆனால் நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு

சேர்ந்த அடுத்த அரை மணி நேரத்தில் என்னை போலீசார் வந்து விசாரித்தார்கள்.

7) சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்தன்று இரவு நானும் என் மாமனார், மாமியாரும் எதிரிகளிடம் சென்று தகராறு செய்தோம் என்றாலும், அவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்ததால் எங்கள் மீது எதிரிகள் குற்ற நடவடிக்கை எடுத்து விடுவார்கள் என்ற பயத்தினால் நடக்காத ஒரு சம்பவத்தை நாங்களே உருவாக்கிக்கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுப்பதற்காக காவல் நிலையம் சென்றேன் என்றாலும், அப்போது எனக்கும், என் மாமனார், மாமியாருக்கும் எவ்வித காயமும் ஏற்படவில்லை என்பதால்தான் எங்கள் புகாரை போலீசார் உடனடியாக எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. நாங்கள் எதிரிகள் மீது பொய்யான புகாரை கொடுப்பதற்காக நாங்களே தன்னிச்சையாக காயங்களை ஏற்படுத்திக்கொண்டு எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி சொல்வதால்தான் என் முதல்விசாரணையில் 108 ஆம்புலன்ஸ் மூலம் போலீசார் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், குறுக்கு விசாரணையில் பழூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாக கூறி முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் தாக்கவில்லை என்றாலும், எங்களுக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும், எனக்கு மூக்கில் எவ்வித சுவாச பிரச்சனையும் இல்லை என்றாலும் சரியல்ல. அவ்வாறு சுவாச பிரச்சனை எனக்கு இருந்திருந்தால் இந்த 3 ஆண்டு காலத்தில் அதற்கான மருத்துவ சிகிச்சை மேற்கொண்டதற்கான மருத்துவ

சான்றுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு சுவாச பிரச்சனை இருப்பதாக நான் சொல்வது நீதிமன்றத்தில் அனுதாபத்தை பெற வேண்டும் என்பதற்காகத்தான் என்றால் சரியல்ல. எங்களுக்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் மரம் வெட்டுவதில் முன் விரோதம் இருந்து வந்ததால், அந்த முன் விரோதம் காரணமாக அவர்களை பழிவாங்க வேண்டும் என்பதற்காக அவர்கள் மீது பொய்யான புகார் கொடுத்து, அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. எதிரிகள் என்னை திட்டவோ, மூங்கில் கழியாலோ, கட்டை கழியாலோ தாக்கவோ இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எந்த குற்ற சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.